எல்லைகளாவன : வடக்கு-முடியால் உருத்தாடும் பெயுலேகேன, ஓர் நீரோட்டம், வெத ஆறச்சிகே டிங்கி அப்புவும் மற்றவர்களும் முடியும் உருத்தாடும் வெர னுகாகேன, முடியால் விற்கப்பட்ட களுதந் திரிகேகேன, முடியால் விற்கப்பட்ட அட்டிக்காகாகேனேகால்ல, முடியால் விற்கப்பட்ட களுதன் திரிகேகேன, வத்தேகே தோமிசும் மற்றவர்களும் முடியும் உருத்தாடும் கன்கானேகேனே அல்லது குடாகேகேன, ஓர் நீரோட்டம், முடி உருத்தாடும் கடகேயாகேன, முடியும் வெத ஆறச்சிகே தொன் கறேலிசும் மற்றவர்களும் உருத்தாடும் கெந்தகெடியேகேன, முடியும் மேற்படியார்களும் உருத்தாடும் மோடருவனகேகேன, யடிகல பன்சலை உருத்தாடும் கலொலாயவத்த; கிழக்கு-ஓர் ஆற, றத்னுக கன்கானன்கே பபுன்காமியும் மற்றவர்களும் உருத்தாடும் பானுகாவத்த, மேற்படியார்கள் உருத்தாடும் பானுகாவத்தேகேன, கன்கானன்கே தினெஸ்காமியும் மற்றவர்களும் உருத்தாடும் ஜூல்காகேன ; தெற்கு-கன்கானன்கே சுவாரிசும் மற்றவர்களும் உருத்தாடும் கெடகாலகாகொறடுவ, கன்கானன்கே சுவாரிசும் மற்றவர்களும் முடியும் உருத்தாடும் கெடகாலகாகொறடுவ, முடியால் உருத்தாடும் கெபெல்லகேனவும் தங்காகேனவும், முடியால் விற்கப்பட்ட தங்காகேன முதலியன, தொன் ஜேமிஸ் அபேயகுணவர்தன சமரசிங்க உருத்தாடும் பின்வத்த, முனுசின்கே தொன் நிகுளஸ் உருத்தாடும் மககேனேவத்த, றனசின் லியனகே தொன் லுவிஸ் உருத்தாடும் பரேகொடகேவத்த ; மேற்கு-முனசிங்கே தொன் நிகுளஸ் உருத்தாடும் பறமீகாவத்த, ஜயவிக்கிரம கன்கானன்கே தினெககாமி உருத்தாடும் தொலேகொறடுவ, அனுத்கே பேதிரிசும் மற்றவர்களும் உருத்தாடும் தெலம்புகாவத்த, முடியும் வீரசின்களுகமகே தொன் பெனேரிசும் மற்றவர்களும் உருத்தாடும் அமுகேன, ஓர் பாதை, முடியும் வீரசின் களுகமகே தொன் பெனேரிசும் மற்றவர்களும் உருத்தாடும் அமுகேன, மேற்படியாரும் மற்றவர்களும் உருத்தாடும் அமுகேனகாகேன, முனசின்கே தொன் அந்திரிஸ் உருத்தாடும் லோகுருவகாவத்த, முடியால் விற்கப்பட்ட கிந்தகாறலமுள்ள, முடியும் வில்லியம் அபேசிரி சமரனுயகவும் மற்றவர்களும் உருத்தாடும் குனு தியகாகேன.

XIV.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 28c | .. | கோறலேகேகேன அல்லது மெட்டிகக்கேகேன .. .. | 2 | 3 | 1 |
| 28f | .. | எமிடியேமண்டியகேன .. .. .. .. | 2 | 0 | 11 |
| | | | 4 | 3 | 12 |

எல்லைகளாவன : வடக்கு-க்ந்தபொடபத்து எல்லை ; கிழக்கு-பெடிகெதெரவத்தேதெனிய (272,071 ம் உரிமைப்படத்திற் காணும் காணி), விக்கிரமரத்ன ஜயசின் ஆறச்சிகே தொன் அந்திரிசும் மற்றவர்களும் உருத்தாடும் பெடிகெதெரவத்தேகேன, மேற்படியார்கள் உருத்தாடும் யகாவத்த ; தெற்கு-றம்புகொளுவ ஆற ; மேற்கு-முடியும் அமறசின் பதிரனகே தொன் பேதிரிசும் மற்றவர்களும் உருத்தாடும் தொலே இகலகேன, கந்தபொடபத்து எல்லை.

XV.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 28k | .. | கல்கெடியேகேன .. .. .. .. | 1 | 2 | 17 |
| 28l | .. | குனு தியகாகேன .. .. .. .. | 1 | 1 | 15 |
| 28m | .. | கல்பொதேகேன அல்லது பெயுலேகேனவும் குடாகாகேனவும் .. .. | 2 | 0 | 10 |
| 28n | .. | பெயுலேகேன அல்லது கல்பொத்தேகேன .. .. .. | 2 | 1 | 30 |
| 28o | .. | குனு தியகாகேன .. .. .. .. | 2 | 1 | 1 |
| 28p | .. | பெயுலேகேன. .. .. .. .. | 1 | 1 | 37 |
| 39c | .. | ஷை .. .. .. .. | 1 | 0 | 15 |
| | | | 12 | 1 | 5 |

எல்லைகளாவன: வடக்கு-முடியும் வில்லியம் அபேயசிரி சமரனுயகவும் மற்றவர்களும் உருத்தாடும் கல்கெடியேகேன, அமரசின்கே சலமனும் மற்றவர்களும் உருத்தாடும் கஸ்கத்தரேவத்த, நாராயனகே பாலகாமியும் மற்றவர்களும் உருத்தாடும் இகலவத்த, ஓர் பாதை ; கிழக்கு-கித்துல்கஸ் ஆற ; தெற்கு-முடி உருத்தாடும் லியனகாகேன, முடியால் விற்கப்பட்ட கிதகமுள்ளேவத்த, முடியால் விற்கப்பட்ட அட்டிக்ககாகேன ; மேற்கு-முடியும் விக்கிரம ரத்ன ஜயசின் ஆறச்சிகே தொன் அந்திரிசும் மற்றவர்ளும் உருத்தாடும் கெதரவத்தேகேன அல்லது குடாகாகேன, மேற்படியார்கள் உருத்தாடும் கெதரவத்த அல்லது மகாவத்த.

XVI.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 39d | .. | வெரனுகாகேன .. .. .. .. | 1 | 3 | 1 |
| 39e | .. | குடாகேமண்டிய .. .. .. .. | 2 | 1 | 11 |
| 39f | .. | றஞ்சகொடகேமண்டிய .. .. .. .. | 1 | 2 | 36 |
| 39g | .. | குடாகேவத்த .. .. .. .. | 1 | 1 | 35 |
| 39h | .. | ஷை .. .. .. .. | 1 | 1 | 25 |
| 39i | .. | கொடகேயாகேன .. .. .. .. | 0 | 3 | 16 |
| 39j | .. | குடாகேனே அல்லது கன்கானிகேகேன .. .. .. | 1 | 3 | 0 |
| 39k | .. | ஷை .. .. .. .. | 0 | 3 | 23 |
| 29i | .. | மோதறவானகேகேன .. .. .. .. | 6 | 1 | 22 |
| 16e | .. | ஆறச்சிகேவத்த .. .. .. .. | 0 | 2 | 35 |
| 16f | .. | கெடகாலகாகொறடுவ .. .. .. .. | 0 | 1 | 24 |
| 24 | .. | கெந்தகெடியேகேன .. .. .. .. | 1 | 3 | 25 |
| 24a | .. | ஷை .. .. .. .. | 2 | 1 | 32 |
| 43 | .. | வெரனுகாகேன .. .. .. .. | 0 | 1 | 12 |
| | | | 24 | 1 | 17 |

எல்லைகளாவன : வடக்கு-வெத ஆறச்சிகே தொன் கரோலிசும் மற்றவர்களும் உருத்தாடும் குடாகேவத்த, வத்தேகே தோமிஸ் உருத்தாடும் பெலவத்த, வத்தேகே அதோனிசும் இன்னுமொருவரும் உருத்தாடும் பத்தலவத்த, வெத ஆறச்சிகே தொன் கரோலிசும் மற்றவர்களும் உருத்தாடும் பறனவேதிகேவத்த அல்லது எடமோறுகாவத்த, வெத ஆறச்சிகே தொன் கரோலிசும் மற்றவர்களும் உருத்தாடும் கீன்தெகிகாகொறடுவ, மேற்படியார்கள் உருத்தாடும் வெதகேவத்த ; கிழக்கு-கல்காவபடல்கே பபுன்காமி உருத்தாடும் இகலவத்த, வெத ஆறச்சிகே தொன் கரேலிசும் மற்றவர்களும் உருத்தாடும் திடிகாவத்த, வெத ஆறச்சிகே தொன் கரேலிசும் மற்றவர்களும் உருத்தாடும் மீகாவத்த அல்லது மெதிரிவத்த, றடசின் வத்தேகே அந்திரிசும் மற்றவர்களும் உருத்தாடும் கிரிந்தேகேவத்த, வெத ஆறச்சிகே தொன் கரேலிசும் மற்றவர்களும் உருத்தாடும் மோதறவானகேகொறடுவ, ஓர் நீரோட்டம் ; தெற்கு-முடியால் உருத்தாடும் புகுல்கெபுறுத, முடியால் உருத்தாடும் கொடகேயாகேன, ஓர் நீரோட்டம், முடியும் வத்தேகே தோமிசும் மற்றவர்களும் உருத்தாடும் கன்காணிகேகேன, முடியால் விற்கப்பட்ட களுதன்திரிகேன, முடியால் உருத்தாடும் மகாகேன ; மேற்கு-கித்துல்கஸ் ஆற, ஓர் பாதை, குடாகேதெனிய (கிராமிகளுக்குரிய).

### XVII.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 28*h* | அட்டிக்ககாகேன | 3 0 13 |
| 28*i* | கெதறவத்தேகேன அல்லது குடாகாகேன | 3 0 0 |
| | | 6 0 13 |

எல்லைகளாவன: வடக்கு-றம்புகொளுவ ஆற, விக்கிரமறத்ன ஜயசின் ஆறச்சிகே தொன் அந்திரிசும் மற்றவர்களும் உருத்தாடும் மகாவத்த அல்லது கெதரவத்த; கிழக்கு-முடியால் உருத்தாடும் கல்பொத்தேகேன, முடியால் விற்கப்பட்ட அட்டுக்ககாகேன; தெற்கு-ஜூல்காகொறடுவ (266,891 ம் உரிமைப்படத்தில் காணும் காணி), 219,982 ம் உரிமைப்படத்திற் காணும் காணி, அட்டுக்ககாகேன (219,981 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); மேற்கு-றம்புகொளுவ ஆற.

### XVIII.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 28*b* | மலபலகேன | 1 0 29 |
| 28*v* | போகாகேன | 1 1 0 |
| 28*w* | பெல்பொலகேன | 0 3 33 |
| 28*x* | ஷை | 4 0 28 |
| 28*y* | தங்காகேன | 1 3 34 |
| 28*z* | ஷை | 0 0 21 |
| 28*ab* | ஷை | 0 2 23 |
| 28*af* | கோன்காகேன | 1 2 30 |
| 28*ak* | பிடவத்தேகேன | 1 3 3 |
| 28*al* | பொல்கொடுவாவேகேன | 0 2 2 |
| 28*am* | ஷை | 2 0 0 |
| | | 16 1 3 |

எல்லைகளாவன: வடக்கு-(272,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி), அட்டிக்காகேன (219,982 ம் உரிமைப் படத்தில் காணும் காணி), ஜூல்காகொறடுவ (266,891 ம் உரிமைப்படத்தில் காணும் காணி), அட்டிக்ககாகேன 219,820 ம் உரிமைப்படத்திற் காணும் காணி); கிழக்கு-முடியால் விற்கப்பட்ட அம்பகாகேன, றுவன்பதிரனகே சிஞ்ஞோஅப்புவும் இன்னுமொருவரும் உருத்தாடும் மாறகாகொறடுவ, முடியும் வீரசின்களுகமகே தொன் பேதிரிசும் உருத்தாடும் கலேகாகொறடுவ, முடியும் வீரசின் களுகமகே தொன் பெனேரிசும் இன்னுமொருவரும் உருத்தாடும் கீல்லகேவத்த அல்லது கெருவா குடாகேகேன, முடியால் உருத்தாடும் தென்னபிடகேன, முடியும் மத்துமாகே தொன் அந்திரிசும் உருத்தாடும் எகலகாகொறடுவ; தெற்கு-மத்துமாகே தொன் அந்திரிஸ் உருத்தாடும் இகலகாகொறடுவ, றத்னபால உன்னுன்சே உருத்தாடும் மாறகாகொறடுவ, அமரகோன் ஆறச்சிகே தொன் ஜூவானிஸ் உருத்தாடும் வெவகொறடுவ அல்லது மாறகாகொறடுவ, முனசின்கே தொன் நிகுலஸ் உருத்தாடும் வெரலுகாகேன; மேற்கு-பம்பொக்ககே மெனிக்காமி உருத்தாடும் துன்மலகாகொறடுவ, பம்பொக்ககே ஜூவானிஸ் உருத்தாடும் பொல்கொடுவேவத்த, கும்பலவளகடகேன (272,072 ம் உரிமைப் படத்தில் காணும் காணி), கெடகாலகே பபுன்அப்பு குடியிருப்பதும் முடியால் உருத்தாடப்பட்டதுமான காணி கோன்காகேன, தெலேக்சின்கே ஆதன் குடியிருப்பதும் முடியால் உருத்தாடப்பட்டதுமான காணி கோன்காகேன, மொடகே பாலகாமியும் இன்னுமொருவரும் உருத்தாடும் மடித்த, றம்புகொளுவஆற.

### XIX.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 28*ah* | குலகாகொறடுவ | 1 0 28 |
| 28*ai* | கீலகேவத்த அல்லது கிருவாகுடாகேகேன | 1 3 17 |
| 28*aj* | தென்னேபிடகேன | 1 1 24 |
| 28*an* | எகலகாகொறடுவ | 0 1 15 |
| 33*o* | கலகாகொறடுவ | 0 1 9 |
| | | 5 0 13 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் தங்காகேன, றுவன்பதிரனகே சிஞ்ஞோஅப்புவும் இன்னுமொருவரும் உருத்தாடும் மாறகாகொறடுவ; கிழக்கு-றுவன்பதிரனகே சிஞ்ஞோஅப்புவும் இன்னுமொருவரும் உருத்தாடும் மாறகாகொறடுவ, வீரசின்களுகமகே தொன் பேதிரிஸ் உருத்தாடும் கலேகாகொறடுவ, விஜேசின்களுகமகே தொன் பெனேரிஸ் உருத்தாடும் கீல்லகேவத்த, விஜேஞயக கன்கானன்கே தொன் மத்தெஸ் உருத்தாடும் இகலகொறடுவ, ஜயவிக்கிரம கன்கானன்கே அந்திரிஸ்அப்பு உருத்தாடும் இகலகொறடுவ, றத்ஞயக கன்தம்பிகே மாதிரிஸ் உருத்தாடும் எகலகாகொறடுவ, மத்துமாகே தொன் அந்திரிஸ் உருத்தாடும் எகலகாகொறடுவ; தெற்கு-முடியால் உருத்தாடும் தென்னபிடகேன; மேற்கு-முடியும் சிரிபதன்அச்சிகே தேசின்அப்பும் உருத்தாடும் பிட்டவத்தேகேன, முடியால் உருத்தாடும் கோன்காகேன, முடியால் உருத்தாடும் பெல்பொலகேன.

### XX.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 28*ag* | கோன்காகேன | 0 2 37 |

எல்லைகளாவன: வடக்கு-தலகாசின்கே ஆதன் குடியிருப்பதும் முடியால் உருத்தாடப்பட்டதுமான காணி கோன்காகேன, முடியால் உருத்தாடும் கோன்காகேன; கிழக்கு- முடியால் உருத்தாடும் கோன்காகேன; தெற்கு-கும்பலாவளகடகேன (272,072 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); மேற்கு-சிரிபத்தன ஆறச்சிகே தேசின்அப்பு உருத்தாடும் பிடவத்தேகேன, கலகாசின்கே ஆதன்குடியிருப்பதும் முடியால் உருத்தாடப்பட்டதுமான காணி கோன்காகேன.

### XXI.—பிரதம படம் 268.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 39*aj* | இகலவத்த | 0 2 12 |
| 39*ak* | ஷை கட்டாடிகேவத்த | 2 1 2 |
| | | 2 3 14 |

எல்லைகளாவன: வடக்கு-சமரசின்ஆறச்சிகே பெனேரிஸ் உருத்தாடும் இகலவத்த அல்லது எலமல்தெனியவத்த; கிழக்கு-முடியால் உருத்தாடும் அங்கெந்தேகெடியேகேன; தெற்கு-முடியால் உருத்தாடும் பெனிகொலகேன; மேற்கு-கன்கானன்கே சுவாரிஸ்அப்புவும் மற்றவர்களும் உருத்தாடும் கெடகாலவத்த, றனசின்லியனகே தினெஸ்காமியும் மற்றவர்களும் உருத்தாடும் இகலவத்த, கட்டாடிகே பெனேரிசும் மற்றவர்களும் உருத்தாடும் கட்டாடிகேவத்த.

[Hambantota S. O. 17—1912.]

[Anuradhapura Notice No. 4,378.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸ்ரூ (மார்ச்) பங்குனிமீ 15 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. யீ. வெயிட்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. யீ. வெயிட்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை நுவரகம்கோறளையில் கல்கடவளதுலானையைச்சேர்ந்த பங்குலிய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 524.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | பங்குலிய (காடு) | 40 | 0 | 20 |
| 1b | ஓயஅத்தறகெலே (பாதைக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 11 |
| 1c | ஓயஅத்தறகெலே | 0 | 2 | 21 |
| 1d | — | 51 | 0 | 36 |
| 3 | பங்குலியபொகுன | 1 | 2 | 10 |
| 4 | அவாயிஅம்பிம | 3 | 3 | 5 |
| 7 | பங்குலியவெவ (குளம்) | 4 | 2 | 4 |
| 11 | பட்டிய | 0 | 0 | 26 |
| 14 | குத்தன்பொகுனேவெல | 0 | 0 | 34 |
| 19 | வெல்அத்தறபிம | 0 | 0 | 15 |
| 20 | கல்பன்எலகெலே (புராதனுதிகளுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) | 7 | 1 | 20 |
| 21 | கல்பன்எல, மல்வத்துஓய (நீரோட்டம்) | 12 | 2 | 33 |
| 22 | கல்பன்எல (நீரோட்டம்) | 1 | 3 | 37 |
| | றோட்டு | 0 | 3 | 15 |
| | நீரோட்டம் | 0 | 1 | 30 |
| | | 125 | 2 | 37 |

எல்லைகளாவன: வடக்கு-எலபத்வெவக் கிராம எல்லை; கிழக்கு-மல்வத்துஓயா; தெற்கு-கல்பன்எல; மேற்கு-அனுராசபுர ஊத்தைக்கோட்டின் எல்லை, கல்பன்எல, பெருமியங்குளம், யோத எல, எலபத்வெவ கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் ஓர் பகுதியாவது இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 393 ஏக்கர் 1 றூட்டு 9 பேட்சும் முன்குறித்த 125 ஏக்கர் 2 றூட்டு 37பேட்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 524.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1a | ஓயஅத்தறகலே | 95 | 1 | 3 | 10 | குட்டன்பொகுனேவெல | 2 | 2 | 3 |
| 2 | பன்குளியவத்த | 0 | 1 | 33 | 11½ | கொடகமத்த | 0 | 0 | 11 |
| 2d | பன்குளியகல | 0 | 3 | 20 | 12 | பன்குளியவத்த | 0 | 0 | 18 |
| 2e | ஷை | 70 | 3 | 17 | 13 | குட்டன்பொகுனேவெல | 1 | 0 | 4 |
| 2f | ஷை | 0 | 1 | 8 | 15 | ஷை | 0 | 2 | 27 |
| 2g | ஷை | 0 | 1 | 0 | 16 | பன்குளியவத்த | 0 | 0 | 10 |
| 5 | கல்பன்எலேகலே | 3 | 2 | 38 | 17 | ஷை | 0 | 1 | 26 |
| 6 | பன்குளியவெல | 9 | 0 | 19 | 18 | கல்பன்எலகலே | 8 | 1 | 28 |
| 6a | ஷை | 0 | 1 | 26 | 23 | புருனஎல | 0 | 3 | 21 |
| 8 | அக்கறகேன | 0 | 0 | 16 | 24 | — | 1 | 1 | 8 |
| 8a | — | 9 | 2 | 13 | | | | | |
| 9 | குட்டன்பொகுண | 186 | 3 | 20 | | | 393 | 1 | 9 |

* இங்கிலிசின் நான்காம் பாகம் 244 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 2—1912.]

---

[Tenders for provisioning Hospitals, Galle, Hambantota, Kalmunai, &c.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு 1912 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும்.

கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1912 ம் ௵ பங்குனி௴ 26 ௳ தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும், அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம்வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம்வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக்கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக் குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜி. மோர்லி,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு பங்குனி௴ 4 ௳ உ.

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | சாப்பாட்டுச் சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை. ரூ. | பணப்பிணையின் தொகை. ரூ. |
|---|---|---|---|
| காலி | சமையல்செய்த சாப்பாடு பாலில்லை | 400 | 800 |
| அம்பாந்தோட்டை | சமையல்செய்த சாப்பாடும் பாலும் | 100 | 200 |
| கல்முனை | ஷை | 200 | 400 |
| மகாஓயா | ஷை | 50 | 100 |
| மாத்தளை | ஷை | 300 | 600 |
| மாத்துறை | ஷை | 200 | 400 |
| பருத்தித்துறை | ஷை | 100 | 200 |
| புத்தளம் | ஷை | 200 | 400 |
| தங்காலை | ஷை | 100 | 200 |

[Tenders for Transport of Stores from Anuradhapura, Batticaloa, Galle, &c.]

மூன்று வருஷத்துக்கு அதாவது 1912 ம் ஆண்டு ஆடி௴ 1 ௳ திகதி துவக்கம் 1915 ம் ஆண்டு ஆனி௴ 30 ௳ திகதி வரைக்கும் அனுராசபுரம், மட்டக்களப்பு, காலி, அப்புத்தலை, எட்டன், களுத்துறை, கண்டி, குருநாக்கல், மாத்தலை, மாத்தறையிலிருந்து சாமான்களை ஏற்றுமதிசெய்ய விருப்பமுள்ளவர்கள் வெவ்வேறு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டுயிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஏற்றுமதிசெய்வதற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1912 ம் வருஷம் சித்திரைமாதம் 2 ௳ தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல்வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் 50 ரூபாய் முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்தன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை 100 ரூபாய் கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப் படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுகொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக் குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜி. மோர்லி,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு பங்குனிமீ 4 ந் உ.

---

[Tender for Arrack Rents, 1912–13.]

சாராயக்குத்தகை அறிவித்தல்.

இத்தால் அறியத்தருவது என்னவானால்:—1912 ம் ஆண்டு ஜூலைமாதம் 1 ந் தேதி முதல் 1913 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் தேதிவரையும் ஆகிய பன்னிரண்டு மாசகாலத்துக்கு இதன்பின்னால் வரும் சாராயக்குத்தகைகளை விலைக்குக் கொள்வனவு பண்ணுவதற்கான கேள்விப்பத்திரங்களைத் திறந்து யோசித்துப்பார்க்கும் நிமித்தமாக, மந்திரசபை மண்டபத்திலே, இதன்பின்னால் வரும் நாட்களிலே, உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டதொரு போட் சமாஜங் கூடப்பெறும்:—

1912 ம் ௵ மார்ச்மீ 18 ந் உ.

1. மேற்கு மாகாணம் .. சியனக்கோறளையும் ஹேவாகம்கோறளையும்.
2. ஷை .. நீர்கொழும்பு டிஸ்திறிக் பிரிவு.
3. மத்திய மாகாணம் .. முழு மாகாணமும்.
4. தென் மாகாணம் .. காலி டிஸ்திறிக் பிரிவு.
5. ஷை .. மாத்துறை அம்பாந்தோட்ட டிஸ்திறிக் பிரிவுகள்.
6. வட மாகாணம் .. யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவு.
7. ஷை .. மன்னார் டிஸ்திறிக் பிரிவு.
8. ஷை .. முல்லைத்தீவு ஷை

1912 ம் ௵ மார்ச்மீ 25 ந் உ.

1. வடமேற்கு மாகாணம் .. (குருநாக்கல் பிரிவில்) ஏழு கோறளை.
2. ஷை .. சிலாப டிஸ்திறிக் பிரிவு.
3. ஷை .. புத்தளை ஷை
4. ஊவா மாகாணம் .. வதுளை ஷை
5. வடமத்திய மாகாணம் .. அநுராஜபுர ஷை
6. கிழக்கு மாகாணம் .. மட்டக்களப்பு ஷை
7. ஷை .. திருக்கோணமலை டிஸ்திறிக் பிரிவு.

நியமித்த நாளில் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப்பிறகு யாதொரு ரெண்டர் கேள்விப்பத்திரமும் ஏறறுக் கொள்ளப்பட மாட்டாது.

கேள்விக்காரன் ஒவ்வொருவனுந் தான் கொடுக்க ஆயத்தமாயிருக்கிற விலை இன்னதென்று தனது கேள்விப்பத்திரத்திற் சொல்லவேண்டும்.

மேற்காட்டியிருக்கிறபடியான சகல குத்தகைகளுக்கும் தனித்தனி வெவ்வேறு கேள்விப்பத்திரம் போடவேண்டும்; கேள்விப்பத்திரத்திற் குத்தகையினது பெயரும் நம்பரும் ஆகிய இரண்டும் எழுதியிருக்கவேண்டும்.

சரியாகச் சீல் முத்திரை வைத்த கேள்விப்பத்திரங்களை, "சாராயக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று அடையாளமிட்டுக் கௌரவ கலோனியல் சக்கிறுத்தார் சேர். ஹியூ. கிளிவ்வோட், கே. ஸீ. எம். ஜீ. யவர்களுக்கென்று மேல் விலாசமிட்டு தபால் மார்க்கமாக அனுப்பினும் அனுப்பலாம், அல்லது கேள்விக்காரன் தானே போட் சமாஜத்தாருக்கு நேரே முகமுகமாய்க் கண்டு கொடுக்கினும் கொடுக்கலாம்.

சாராயக்குத்தகைகள் கடைசியாக விற்கப்பட்டபின்பு, விற்பனவுக் கொந்தீசுக் கட்டுப்பாடுகள் திருத்திப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. விற்பனவுப்புதுக் கொந்தீசு மாதிரித்தாள்களையும் தவறணை இடாப்புக்களையும் இலங்கையிலுள்ள எந்தக் கச்சேரியிலேனுங் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு காரியம் கவனித்துக்கொள்ளவேண்டியது: கொந்தீசுக் கட்டுப்பாடுகளின்படி விற்பனவுபண்ணப்படும் சிலாக்கிய உரித்து என்னவாகில், அரக்குச் சாராயம் மாத்திரமே சில்லறையில் விற்கும் உரித்தொன்றே; கள்ளு விற்கும் உரித்து இதிற் சேர்ந்ததல்ல என்பதாம்.

இங்கிலீஷ் பேச இயலாத கேள்விக்காரர்கள் போட்சமாஜத்தோடு பேசிக்கொள்ள விரும்பினால் தங்கள் தங்கள் துவிபாஷகரைக் கூட்டிவரவேண்டும்.

சட்டநிருபணசபை மண்டபத்தில் கேள்விக்காரன் நேரே தானேயாவது தனது அதிகாரம்பெற்ற காரியஸ்தர் மூலமாயாவது, வந்திருந்து தனது கேள்விப்படி ஒரு மாசக் குத்தகைப்பணத்தை உடன்கையிலே கட்டவும் ஆயத்தமாயிருந்தாலன்றி, யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டுக்குக் குறையாத கேள்விப்பத்திரங்கள் ஒரே சமனான தொகையாகக் கேட்டிருக்கும்பக்ஷத்தில், போட் சமாஜத்தார் தமது இஷ்டப்படி இரண்டில் ஒன்று செய்யலாம்; (க) அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மாத்திரமே விலை வைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் உடன்கையிலேதானே போட்டுக் குத்தகையை விற்பது; அல்லது, (உ) புதுக் கேள்விப்பத்திரங்கள் கேட்டு வாங்குவது.

அதிகமுயர்ந்த கேள்வியையாவது எந்தக் கேள்வியையுமாவது ஏற்பதற்கு போட்சமாஜத்தார் கடமைப்பட்டவர்களல்ல.

மேலும் இத்தால் அறியத்தருவது என்னவானால்:—

(கோட்டை புறநீங்கலான) கொழும்பு நாலு கடவத்தைச் சாராயக் குத்தகையையும், மத்திய மாகாணத்துச் சாராயக் குத்தகையையும், காலி நாலு கடவத்தைச் சாராயக் குத்தகையையும் விலைக்கு வாங்கினவர்கள், கொழும்பு கண்டி காலிகளின் மூனிசிப்பல் நகரசங்க எல்லைகளினுள்ளே உள்ள ஒவ்வொரு தவறணையிலும் சாராயம் சில்லறையில் விற்பதற்காக 1891 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின்படி கொடுக்கும் ஒவ்வொரு லைசென்ஸ் பத்திரத்துக்குமாக ஐந்நூறு ரூபா முத்திரை வரி 1892 ம் ஆண்டின் 9 ம் இலக்கச்சட்டத்து ஏற்பாட்டின்படி இறுக்கவேண்டியவர்களாவர் என்பதாம்.

கொன்றிருேல்லர் அவ் றெவனியூக் கந்தோரில் நேரே முகமுகமாயாவது காகிதம் எழுதியாவது கேட்டு விலையில்லாமல் இனமாகக் கேள்விப்பத்திர மாதிரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிகம் ஏதும் சங்கதி அறியவேண்டுமானால் கௌரவ கொன்றிருேல்லர் அவ் றெவெனியூத் துரையை நேரே கண்டு கேட்டாலும் அவருக்குக் காகிதம் எழுதினாலும் அவர் அறிவிப்பார்.

உத்தமனார் கட்டளைப்படி,
ஹியூ. கிளிவ்வோட்,
கலோனியல் சக்கிறுத்தா.

கொழும்பில், கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1912 ம் ௵ பெபுறுவரிமீ 23 ந் உ.

[Tenders for transporting Salt from Karaiur to Mannar Salt Stores.]

இத்தாற் சகலருமறியவும் 10,000 அந்தர் உப்பு கரையூரிலிருந்து மன்னாருக்கு ஏற்றிக் கொண்டுபோய்க் கொடுக்க விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காறன் ஏற்றவேண்டிய உப்பில் 3,000 அந்தரை 1912 ம் ஆண்டு சித்திரைமாதத்திலும் மிகுதியை அடுத்த கார்த்திகை மாதத்திலும் ஏற்றிக்கொண்டுபோய்ஒப்புவிக்க வேண்டியவராவர்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரைவைத்து மேல்விலாசமிட்டிருக்க வேணும்:

(a) மூலப்பிரதியில் வடமாகாணம் கவுண்மேந்து ஏசென்றுவுக்கு மேல்விலாச மெழுதுக.

(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறைவருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாச மெழுது.

3. "உப்பு ஏற்றக் கேள்கும் கேள்விப்பத்திர மென்று" உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1912 ம் ஆண்டு பங்குனி (மார்ச்)மீ 25 ந் தேதி, திங்கள்கிழமை மத்தியானத்துக்கு முன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரிலும் அரசிறைவருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துகளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெறவிரும்புவோர் கச்சேரியில் ரூபாய் 50 கட்டிப் பற்றிச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசன்றினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டு பத்து நாளைக்குள்ளாகப் போதியபிணை கொடுக்கத்தவறினால், அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். அப்படித் தவறியவர்களின் பெயர் கவுண்மேந்துக் கொந்திருத்து கொடுக்கப்படாதென்று தள்ளப்பட்டவர்களுடைய பெயர் பதியப்படும் இடாப்பிலும் சேர்க்கப்படும். ஒப்பந்தம் நிறைவேற்றியவுடன் கட்டிய காசு முதலியவை திருப்பிக் கொடுக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணைநிற்போமென்று சம்மதங்காட்டும் பத்திரம் அணைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேணும்.

7. கேள்விப்பத்திரத்தில் ஒரு அந்தருக்கு ஏற்றுமதிகூலி எவ்வளவென்று குறிக்கவேண்டும். நூற்றுக்கு இரண்டு வீதத்துக்கு மேற்படாமல் சேதத்துக்குக் கழிவுவிடப்படும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். மற்றுங் காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

9. மேற்சொல்லியவைகளுக்கேற்க எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

10. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம்சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவண்மேந்துக்குண்டு.

என். ஜே. லட்டிங்டன்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1912 ம் ஆண்டு பங்குனிமீ 2 ந் உ.

---

[Tenders for repairing the Salt Department Quarters and for erecting a New Patrols Hut at Nachchikali, Puttalam.]

1912 ம் ஆண்டு பங்குனிமீ 21 ந் திகதி, பிற்பகல் 1 மணிவரைக்கும் புத்தளம் உதவி அரசாட்சி ஏஜென்றுத்துரையவர்களால் மேல்உறையின்மேல் "புத்தளம் நாச்சிக்களி உப்பளத்திலிருக்கிற உத்தியோகஸ்தரின் வீடுகள் பழுதுபார்க்கவும், காவற்காரனுக்கு வீடொன்று கட்டவும்" ஆக கொந்தருத்துக் கேட்கும் விண்ணப்பப்பத்திரம்" என்று எழுதி லாகிரி மெழுகாற் ஒட்டப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கொந்திருத்தெடுக்க விரும்புமவர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்.

பழுதான அல்லது உழுத்த மரந்தடிகளை அகற்றிப் புதிய திறமான மரந்தடிகள் போடவேண்டியது. பூட்டுகள் பாரத்திற்காக வீட்டின் கூரைகளின்மேல் போடவும், உத்தியோகஸ்தர் காவற்காரரின் வீடுகள், வெளிவீடுகளின் சுவர்கள் பழுதுபார்க்கவும், வெள்ளையடித்துவந்தவைகளைப் புதிதாய் வெள்ளையடிக்கவும் வேண்டியது. பழுதுபார்க்கவேண்டிய கதவுகள் யன்னல்களைப் பழுதுபார்த்துச் சிவப்புத்தீந்தை பாவிக்கவும், தரையை உயர்த்தவேண்டிய இடங்களிற் உயர்த்தி மட்டப்படுத்தி மொங்கான் பாவித்துச் சாணகத்தால் மொழுகவும் வேண்டியது. பழைய உக்கின் விறுந்தைக் கப்புகள் தீராந்திகளை அகற்றி புதிய திறமான கப்புகளும் தீராந்திகளும் போட அல்லது பாவிக்கவேண்டியது: வெள்வு வேலிகளும் விறுந்தையின் தட்டைவேலிகளும் தட்டிகளும் நேர்த்தியாய் பழுதுபார்க்கவேண்டியது.

முதற்பேரின் குசினிவீட்டுக்கு 6 அடி நீளம் 3 அடி அகலம்கொண்ட கதவொன்று பூட்டுத் துறப்புடனும், 2 அடி 6 இஞ்சு நீளம் 3 அடி அகலம்கொண்ட ஒரு யன்னலும் போட வேண்டியது. முதலாம் கொஸ்தாப்பு (அல்லது இரண்டாவதின்) வீட்டுக்கு நீளம் 21 அடி சுற்றளவு 1 அடி 6 அங்குலம்கொண்ட முகட்டுவளை இப்போ தவ்வீட்டிலிருக்கிறதற்குப் பதிலாய் போடவேண்டியது. முதலாம் கொஸ்தாப்பவின் வீட்டுக்கு நீளம் 5 அடி அகலம் 3 அடிகொண்ட பெலனுள்ள பலகையினால் செய்த கதவொன்று பாவிக்க வேண்டியது. முதலாம் கொஸ்தாப்பரின் வீட்டுக்கு எதிராய் இருக்கிற கிடுகினால் வேய்ந்திருக்கும் கொட்டில் புதிப்பிக்க வேண்டியது. காவற்காரன் எச். மூண்டின் வீட்டுக்கு 5 அடி நீளம் 3 அடி அகலம்கொண்ட பெலனுள்ள மரத்தினால் பாவிக்கப்பட்ட கதவுமூடி பிணைச்சலுடன் பாவிக்க வேண்டியது. காவற்காரன் குறேயின் இப்போதிருக்கிற கொட்டிலை முற்றுய்ப் பிரித்து அந்த இடத்தில்தானே புதிய மரந்தடிகள் பாவித்துக் கொட்டில் கட்டவும், சுவர்கள் களிமண்ணால் தீர்த்தி அழுத்தவும், உப்புத்துரையவர்களின் வங்களாவுக்கு வடக்கு மேற்குப் பக்கங்களிலுள்ள முற்றத்தின் வேலியை பனைமட்டையால் அடைக்கவும் வேண்டியது.

கேள்விக்காரர் இதன் பின்னுற் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது:—

1. கேள்விக்காரர் 1912 ம் ஆண்டு பங்குனிமீ 20 ந் திகதிக்குமுன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்டவேண்டியது. நியமிக்கும் நியாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத்தவறினால், இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்கு பறிமுதலாக்கப்படும்.

2. கொந்தீஸ் அல்லது கடிதங்கள் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கும் இடத்தையும்பற்றி மேல்விலாசம் கொடுக்கவேண்டியது.

3. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியஸ்தலைவரவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏஜன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பவேண்டியது.

4. வேலைநடத்த முற்பணம் கொடுபடமாட்டாது.

5. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்ததின்பின் ஒரு மாதக் காலத்துக்குள் இந்த வேலை செய்துமுடித்திருக்க அல்லது பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

6. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்கள் புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளவும்.

யே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசென்று.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ஆண்டு பங்குனிமீ 5 ந் உ.

[Tenders for repairing the Quarters of the Salt Department Officers of the Northern Depot, &c., Puttalam.]

“ புத்தளம் வட டிப்போவின் உப்பு டிப்பாற்மென் உத்தியோகஸ்தருடைய வீடுகளையும் இரண்டாவதின் வீட்டின் முன்விறுந்தையின் அருகை செங்கல்லால் கட்டியும் பிற்பக்கத்து சிவரை சீமந்தால் பூசவென்று ” மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களால் 1912 ம் ௵ பங்குனிமீ 21 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்.

உழுத்ததும் பழுதானதுமான மரங்களையும் கிடுகுகளையும் எடுத்துப்போட்டு புதிய கிடுகுகளும் பெலத்த மரமும் போடப்படவேண்டும்.

பூட்டுகள் கூரைக்கு மேலாக பாரத்துக்கு போடப்பட வேண்டும்.

புதுக்கிடுகினால் சிவர் கட்டும்போது தேவையான கதியால் அல்லது வரிச்சால் கட்டுப்படவேண்டும். விறுந்தை கட்டை வேலிகள் எல்லாம் பெலனாக பழுதுபார்க்க வேண்டும்.

வளவுவேலிகள் நேராகவும் நேர்த்தியாகவும் பெலனாகவுமிருக்கவேண்டும்.

கங்காணியினுடைய வீடும் வெளிவீட்டின் சிவர்களும் பழுதுபார்த்து வெள்ளையடிக்கவும். கதவுகளும் யன்னல்களும் பழுதுபார்க்கவேண்டிய இடங்களில் பழுதுபார்த்து தீந்தை பூசப்படவேண்டும்.

கங்காணியினுடைய படுக்கையறையின் சிவரை இடித்து ஒரு கதவும் நிலையும் பெலப்படுத்தவேண்டும்.

இரண்டாவதுடைய வீட்டின் விறுந்தையின் கூரையை ஒரு அடி உயரத்துக்கு இன்னும் ஒரு வளை சிவரில் வைத்து எழுப்ப வேண்டும்.

பழைய தூண்கள் உள்ள இடத்தில் புதிய தூண்கள் வைத்து இரண்டாவதின் தலைவாசலில் ஒரு சிறு மண்டபம் கட்டவேண்டும்.

உப்பு சிறுப்பருடைய வங்களாவின் வெளிவீட்டின் வேலிகள் பழுதுபார்க்கவேண்டும்.

கேள்விக்காரர் கவனிக்கவேண்டிய ஏற்பாடுகள் :—

1. கேள்விக்காரர் 1912 ம் ஆண்டு பங்குனிமாதம் 20 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்டவேண்டும். உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத்தவறினால், இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்குப் பறிமுதலாக்கப்படும்.

2. அறிவித்தல் அல்லது கடிதங்களை பெற்றுகொள்ளுகிறதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுக்கவேண்டும்.

3. வேலை நடத்த முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்ததின்பின் ஆறு கிழமைக்குள் இந்த வேலையைச் செய்து முடிக்கவேண்டும்.

5. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்கள் புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்து கொள்ளலாம்.

யே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசென்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ௵ பங்குனிமீ 7 ந் திகதி.

---

[Tenders for repairing Salt Stores Northern Depot, Puttalam.]

“ புத்தளம் வட டிப்போவின் 22 ம், 24 ம், 26 ம், 27 ம், 28 ம் நம்பர் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்க ” வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை யுடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையவர்கள் 1912 ம் ஆண்டு பங்குனிமீ 21 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்.

24 ம் 27 ம் நம்பர் உப்புக்குதங்களின் கூரையைத் திரும்பப் புதுக்கிடுகினால் வேயவும் மேற்சொல்லப்பட்ட உப்புக்குதங்களின் நிறுவை மண்டபங்களைப் பழுதுபார்க்கவும் வேண்டும்.

உப்பக்குதங்களின் நாலு பக்கத்தின் வேலிகளும் நேர்த்தியா யடைக்கப்பட்டு புதுக்கிடுகினால் உள்ளும் பிறமும் சாத்தப்படவேண்டும்.

உப்புக்குதங்களில் முகட்டு வேலியும் மோதலானவும் சரிந்த வேலிகளை முற்றாய்ப் பழுதுபார்க்க வேண்டும்.

வளைகளும் பூட்டுகளும் கப்புகளும் வரிச்சுகளும் புதியதும் பெலத்ததும் போடப்பட வேண்டும்.

தேவையான உதைகால்கள் கொடுபட வேண்டும்.

கூரையின் மேல்பாரத்துக்காகப் பூட்டுகள் போட வேண்டும்.

கேள்விக்காரர் கவனிக்கவேண்டிய ஏற்பாடுகள் :—

1. கேள்விக்காரன் 1912 ம் ஆண்டு பங்குனிமீ 20 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்டவேண்டும். உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்குப் பறிமுதலாக்கப்படும்.

2. அறிவித்த லல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்காகக் கேள்விக்காரர் புத்தளத்தில் ஓரிட விலாசங் கொடுக்கவேண்டும்.

3. வேலை நடத்த முற்பணங் கொடுக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்ததின்பின் ஆறு கிழமைக்குள் இந்த வேலையைச் செய்துமுடிக்கவேண்டும்.

5. இவைகளைப்பற்றிய வின்னும் மேலதிகமான விபரங்களைப் புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவியறிந்துக் கொள்ளலாம்.

யே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசென்த்துரை.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ௵ பங்குனிமீ 7 ந உ.

---

[Tenders for Kalladi and Navatkuda Ferry Rent, Batticaloa.]

முந்தின கொள்வனவுகாரனினது நட்டத்திற்கு 1912 ம் ஆண்டு சித்திரைமாசம் 1 ந் திகதி தொடக்கம் 3 மாசத்திற்குக் கல்லடித் துறைக்குத்தகையையும் அதனைச்சார்ந்த நாவற்குடாத் துறைக்குத்தகையையும் 1912 ம் ஆண்டு பங்குனிமாசம் 28 ந் திகதி பகல் 12 மணிக்கு மட்டுக்களப்புக் கச்சேரியில் பிரசித்த ஏலத்தில் கீழ்மாகாண ஏசன்றர் அவர்கள் கூறிவிற்பர்.

2. அரசாட்சி ஏசன்றருக்கு விருப்பமாயின் உயர்ந்த கேள்விக்காரனினது கேள்வியை ஏற்றுக்கொள்வர்.

3. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் உடனேயே விற்பனையின் பொருத்தனைகட்குக் கையொப்பமிட்டுத் தனது கேள்வியின் பத்திலொன்றைக் கட்டவேண்டியதுமல்லாமல் தொகையின் மூன்றிலொரு பங்குக்கு கைமேற்பணமாக அல்லது தொகையின் அரைவாசி பெறக்கூடிய ஈடு, ஒற்றியில்லாத காணியை, தேசாதிபதியவர்கள் அனுமதிகொடுத்து 30 நாளைக்குட் பிணையாகக் கட்டவேண்டும்.

4. சங்கிலியால் வேலைசெய்யப்படும் பாதை வள்ளம் பகிரங்க வேலைக் கந்தோரால் பழுதுபார்க்கப்படின் அதின் செலவு குத்தகைகாரனிட மிருந்து அறவிடப்படமாட்டாது. ஆயின் வேணுமென்று அல்லது கவலையீனமாய் அவ்வள்ளத்திற்குக் குத்தகைகாரனாவது கூலியாட்களாவது பழுதுசெய்தால் குத்தகைகாரனே பாத்திரவாளியாய் எண்ணப்படுவன்.

5. 1896 ம் ஆண்டின் 3 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி வாங்கலாளி நடந்துகொள்ளவேண்டியது. பொருத்தனைகளின் பிரதிகளைக் கச்சேரியிற் கேட்டுப்பெற்றுக கொள்ளலாம்.

6. பிரசித்த ஏலத்தில் கேள்விக்காரன் இல்லாவிட்டால் அல்லது அரசாட்சி ஏசன்றர் அவர்கள் விரும்பாத கேள்விக்காரன் உண்டானால் ஏசன்றவர்கள் தான் விரும்பிய வண்ணம் குத்தகையை விற்பார்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைக் கச்சேரியிற் கேட்டுபெற்றுக்கொள்ளலாம்.

சீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசன்றர்.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1912 ம் ஆண்டு பங்குனிமீ 7 ந் திகதி. ”

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.